1974 மார்ச் 26]

2. நடைமுறைக் கேள்வி

அதிக துணை வினாக்கள் கேட்க வாய்ப்பு தருவது குறித்து

திரு. எம். சுரேந்திரன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்தின்போது 623 ஆம் நம்பர் பஞ்சாலை சம்பந்தமான கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பின்னால் முதலமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள். நேரம் இடம் தராததால் ஒரு சப்ளிமெண்டரி கேள்வி கேட்கக் கூட உறுப்பினருக்கு இடம் தரப்படவில்லை. ஆகவே, முதலமைச்சர் சொன்ன பதில் அங்கே நின்று விட்டது. அதனால் இந்த கேள்வியின் தன்மையை ஒன்றும் இல்லாமல் செய்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. நா. ரவீசாமி : இந்தச் சட்டமன்றத்தில் ஆளும் கட்சி சார்பில் 173 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். விவாதமானாலும் கேள்வி நேரமானாலும் எங்கள் தலைவர் பெருந்தன்மை காரணமாக எதிர்க்கட்சிக்காரர்களுக்கு அதிக நேரம் தருகிறார்கள். இன்றைக்கு கேள்வி நேரத்தில் 65 துணைக் கேள்விகள் கேட்கப்பட்டன. அதில் ஆளும் கட்சிக்காரர்கள் 20 கேள்விகள் கேட்கத்தான் தலைவர் அவர்கள் அனுமதி தந்தார்கள். இப்படி ஆளும் கட்சிக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டால் ஏதோ ஆளும் கட்சி செயல்படாத முறையில் இருப்பதாக பொதுமக்கள் எண்ணுவார்கள். எனவே கேள்வி நேரத்திலாவது ஆளும் கட்சிக்காரர்களுக்கு அதிக நேரம் அனுமதி வழங்கப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆளும் கட்சி பதில் சொல்லி செயல்பட்டால் போதும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய வீராசாமி அவர்கள் 20 கேள்விகள் கேட்கத்தான் ஆளும் கட்சிக்காரர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். கேள்வி நேரத்தில் தான் பல விஷயங்களை அமைச்சர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. அமைச்சர்களிடமிருந்து விரிவாக பதில் கிடைக்கிறது. முதலமைச்சர் அவர்களும் அதே முறையில்தான் சொல்லியிருக்கிறார். ஆகவே தலைவரவர்கள் உறுப்பினர் சொன்னார் என்பதற்காக கேட்டுவிடக்கூடாது என்று எதிர்க் கட்சி சார்பில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் ஒன்றுமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இது நம்முடைய பேரவை சம்பந்தப்பட்டது. நம் பேரவையில் நிகழ்ச்சி அத்தனையையும் குறிப்பெடுக்க பத்திரிகையாளர்களுக்கு நாம் இடம் ஒதுக்கி இருக்கிறோம். இடம் ஒதுக்குகிற பிரச்னை பற்றி . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இடம் கொடுக்கிறது எல்லாம் அட்வைசரி கமிட்டியிடம் இருக்கிறது. பேரவைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

3. கவன ஈர்ப்பு

(அ) எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மாணவிகள் மூன்றாவது கால கட்டணத்தை செலுத்த வேண்டுமென கல்லூரி நிர்வாகம் வற்புறுத்தலும் அதனால் மாணவிகளுக்கு ஏற்பட்டுள்ள அல்லலும் குறித்து.

THIRU H. V. HANDE : I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the hardship caused to the students of S.I.E.T. Women's College as a result of the management of the College claiming Rs. 80 for the third term college fees from each student.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அண்மைக் காலம் வரை தனியார் கல்லூரிகளின் கணக்குகள் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஒப்புதல் பெற்ற தனிப்பட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு வந்தது. இந்த முறையை மாற்றி தனியார் கல்லூரிகளின் கணக்குகளை இனி கல்வித் துறை தணிக்கை பிரிவு தணிக்கை செய்யும் என்று அரசு ஆணையிட்டது. இதற்கேற்ப எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியின் கணக்குகளை கல்வித் துறைத் தணிக்கைப் பிரிவு சரிபார்க்கும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தினர். ஆனால் நிர்வாகம் இதற்கு